இவர்களின் குழந்தைகள் படிப்பதற்கு அரசு சலுகைகள் கிடைக்கவும், அரசு வேலைகளில் முன்னுரிமை கிடைக்கவும் இவர்களைச் சமுதாயத்தில் முன்னேற்றப் பாதையில் எடுத்துச் செல்லவும், மாண்புமிகு இதயதெய்வம் அம்மா அவர்களின் அரசு கருணை உள்ளம் கொண்டு, செக்காளர் சமுதாய மக்களை மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க நடப்பாண்டிலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-55

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு இதைப் பரிசீலனையில் எடுத்துக்கொள்ளும் என்று இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திருமதி எஸ். ராஜம்மாள்.

திருமதி எஸ். ராஜம்மாள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதயதெய்வம் அம்மா அவர்களை வணங்கி எனது கேள்வியினைத் தொடங்குகிறேன். தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையம் எதனை அளவுகோலாகக் கொண்டு பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்கப் பரிந்துரைத்துள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. சுதர்சனம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையத்தால், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்க்க, சமூக ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை, கல்வி ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை மற்றும் பொருளாதார ரீதியான பிற்படுத்தப்பட்ட நிலை ஆகிய அளவுகோல்களின்படி பரிந்துரைக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 137, திரு. கே.கே. உமாதேவன், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

2002 ஏப்ரல் 12]

137—

நினைவுச் சின்னம்

*9273—**திரு. கே.கே. உமாதேவன்:**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கனியன் பூங்குன்றனாருக்கு நினைவுச் சின்னம் அவர் பிறந்த இடமான மகிபாலன்பட்டியில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன், செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. கே.கே. உமாதேவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தைக் காக்க வந்த தாயாக, நிகழ்காலப் புறநானூற்று வரலாறாகத் திகழ்கிற மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற உலக ஒருமைப்பாட்டுக் கருத்தை கடைச்சங்க காலத்திலே தமிழகத்தில் இருந்து, அதுவும் குறிப்பாக, என்னுடைய திருப்பத்தூர் தொகுதி, மகிபாலன்பட்டி கிராமத்தில் பிறந்து உலகிற்கு உணர்த்திய அந்தச் சங்கப் புலவர் கனியன் பூங்குன்றனார் பிறந்த வரலாற்றுச் சிறப்புமிக்க மண்ணில் அவருடைய நினைவுச் சின்னம் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசின் சார்பாக உருவாக்கப்படுமா என்று பேரவைத் தலைவர் மூலமாகக் கேட்கிறேன்.

மாண்புமிகு திரு. கே.கே. பாலசுப்ரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்காகவும், சமுதாய முன்னேற்றத்திற்காகவும் அயராது பாடுபட்ட தலைவர்களின் நினைவகங்கள், சிலைகள் ஆகியவை எல்லாம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சி 1991-1996 ஆண்டுகளில் நடைபெற்றபோது அந்தத் தலைவர்களை நினைவு கூர்கின்ற வகையிலே சிறப்பாக அமைக்கப்பட்டன. தற்போது அரசின் நிதி நிலைமைக்கேற்ப அரசு சிந்திக்கும் என்பதை அவையின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 138, திரு. க. முருகவேல் ராஜன், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர்.